

புதுக்கோட்டை மாவட்டம் / மாநகராட்சி, பிரகதாம்பாள் அரசினர் மேல்நிலைப்பள்ளியில், தேசிய குடற்புழு நீக்க மருந்து வழங்கும் முகாமினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 11.08.2025 அன்று துவக்கி வைத்து, மாணவிகளுக்கு மாத்திரைகளை வழங்கினார். உடன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா , மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.விஜயகுமார் (அறந்தாங்கி), முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்களின் சின்னத் தாயார் பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், உடல் நலக்குறைவால் சிகிச்சை பெற்று வரும் அம்மையார் செல்லம்மாள் அவர்களின் உடல்நலன் குறித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் ஆகியோர் சென்று நலம் விசாரித்தார்கள். உடன் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன் மற்றும் மருத்துவர்கள் உடனிருந்தனர்.

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கருத்தரங்கம் மற்றும் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஆக. 14 - தி.மு.க. ஆதிதிராவிடர் நல க்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாபெரும் கருத்தரங்கம் மற்றும் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் புதுக்கோட்டை, மாலையீடு, கற்பகவிநாயகர் மஹாலில் 16.08.2025 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையிலும், ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் மருதூர் ஏ.இராமலிங்கம், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில இணைச் செயலாளர்கள் வி.பி. இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, செ.புஷ்பராஜ், மாநில துணை செயலாளர்கள் பி.துரைசாமி, அரூர் சா.இராஜேந்திரன், கொடநாடு மு.பொன்தோஸ், மூ.பரமானந்தம், எஸ்.மாரியப்பன் கென்னடி, சி.தசரதன் மற்றும் தகடூர் கொ.ரமேஷ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இக்கருத்தரங்கு கூட்டத்தை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சரும் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரும் ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவருமான மா.மதிவேந்தன் மற்றும் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் கருத்தரங்கை துவக்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் சூலூர் கருமத்தம்பட்டி பகுதியில் கணியூர் ஊராட்சியில் கலைஞர் நூலகத்தில் அமைந்துள்ள கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் செயலாளர்கள் சிபி. கே.செந்தில்குமார், அன்பரசு, மன்னவன், மகாலிங்கம், முத்துமாணிக்கம், பேரூராட்சி தலைவர்கள் பி.எஸ்.செல்வராஜ், புஷ்பலதா ராஜகோபால், விநாயகா பழனிச்சாமி, தேவி மன்னவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் சட்டமன்ற தொகுதி ஓசூர் ஊராட்சி ஒன்றியம் அச்செட்டிப்பள்ளி ஊராட்சி எடப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு பள்ளிகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 34 இலட்சத்து 23 ஆயிரம் மதிப்பில் 2 வகுப்பறை கட்டிடம் அமைப்பதற்கு மாவட்டச் செயலாளர், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், பணிகளை துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் முனிராஜ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் வெங்கடசாமி, கிளை செயலாளர் வெங்கடேஷ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பிரகாஷ், எடையநல்லூர் ரவி, தொரப்பள்ளி ராமூர்த்தி, தேவராஜ், மாதேவப்பா, சுப்பு, முன்னாள் வார்டு உறுப்பினர் பில்லப்பா, நஞ்சப்பா, முனிராஜ், வெங்கடசாமி, எல்லப்பா, மது, நாராயணசாமி, கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி, போலுப்பள்ளி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பாக தேசிய குடற்புழு நீக்க நாளையொட்டி, மாணவ மாணவியர்களுக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் ஆகியோர் ஆல்பெண்டாசோல் மாத்திரைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் ஆகியோர் உள்ளனர்.

## மாதவரம் வடக்கில் இளைஞர் அணி சார்பில் நல உதவிகள்!

சென்னை, ஆக.14 –

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ர.விஜய் ஆனந்த் ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில், சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், வட்ட செயலாளர் மாத்தூர் கா.தாமரை செல்வன் ஆகியோர் முன்னிலையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளையொட்டி அவருடைய திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து அதை தொடர்ந்து பொது மக்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, மாமன்ற உறுப்பினர் கே.காசிநாதன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சி.எஸ்.எஸ்.டி.சீனிவாசன், ஆதி திராவிட நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் எச்.ஜெகன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ராஜேஷ் கண்ணன், அஜய் தென்னவன், டொமினிக் பிரான்சிஸ், எம்.சாந்தகுமார், மனோஜ் (எ)தமிழ்மாறன், ச.சதீஸ், ம.குறளரசன், மணிமாறன், தேவராஜ், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.துரைசாமி, மாவட்ட இலக்கிய அணி துணை தலைவர் துரை தசரதன், மாதவரம் வடக்கு பகுதி மகளிர் அணி அமைப்பாளர் சுகாசினி, துணை அமைப்பாளர்கள் சரஸ்வதி, அத்திக்குளம் தேவி, பெரியநாயகி, வட்டத் துணைச் செயலாளர் துளசி, பகுதி பிரதிநிதி கதிரவன், பாக முகவர்கள் அண்ணாதுரை, நாகராஜன், கலைச்செல்வி சுந்தரி எஸ்தர் ராணி, எல்.பி.எப்.ஆட்டோ ஸ்டாண்ட் வேலுசாமி, முகமது முஸ்தபா, ஐ.சி.எப்.சிவப்பிரகாசம், மஞ்சம்பாக்கம் சிவராமன் மற்றும் கழக இளைஞரணி தோழர்கள் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

## நேற்று முன்தினம் (12.08.2025) நிகழ்வுகள்!



**1. பத்தாண்டுகளாகியும் மதுரைக்கு வராத எய்ம்ஸ் - ரூ. 1264 கோடி ஒதுக்கீட்டின் நிலை என்ன?**

**டாக்டர் கனிமொழி சோமு கேள்வி**



மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை 2015 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டு 2019-20 ஒன்றியபட்ஜெட்டில்1,264 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் அதன் கட்டுமானம் மற்றும் செயல்பாட்டில் தாமதம் ஏற்பட்டதற்கான காரணம்

திட்டத்தை விரைவுபடுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்குமா மற்றும் அது எப்போது முழுமையாக செயல்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

**2. உள்நாட்டு உர உற்பத்தியை மேம்படுத்த ஒன்றிய அரசிடம் உள்ள திட்டம் என்ன?**

**திருச்சி சிவா கேள்வி!**



வேதியியல் மற்றும் உரங்கள் நிலைக்குழு பரிந்துரையின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள கூடுதல் யூரியா உற்பத்தி அலகுகள் எப்போது செயல்பாட்டுக்கு வரும் என மாநிலங்கலவையில் திமுக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா கேள்வி எழுப்பியுள்ளார்.

காலாவதியான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் உர உற்பத்தி ஆலைகளை நவீனமயமாக்க அரசாங்கத்திடம் உள்ள திட்டங்கள் என்ன மற்றும் உள்நாட்டு உற்பத்திக்கான திட்டமிடப்பட்ட பங்களிப்பு என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**3. நியாயவிலைக் கடைகளில் கடலை எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் வழங்க கல்யாணசுந்தரம் கோரிக்கை!**



தேங்காய் மற்றும் கடலை பயிர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு உதவ அரசு நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய் மற்றும் கடலை எண்ணெய் வழங்க திமுக மாநிலங்கலவை உறுப்பினர் கல்யாணசுந்தரம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை வைத்துள்ளார். இது மக்களுக்கு மலிவு விலையில் சமையல் எண்ணெய்கள் கிடைக்க வழி வகை செய்யும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

**4. ஜி.எஸ்.டி.யால் வருவாய் இழக்கும் தமிழ்நாடு - தீர்வு நடவடிக்கை என்ன?**

**டாக்டர் கனிமொழி சோமு கேள்வி!**

சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அமல்படுத்தப்பட்டதிலிருந்து தமிழ்நாடு உட்பட பல மாநிலங்கள் வருவாய் இழப்பை சந்தித்து வருகிறது. இது குறித்து திமுக மாநிலங்கலவை உறுப்பினர் டாக்டர் கனிமொழி சோமு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

சுகாதாரம், கல்வி மற்றும் உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் தமிழ்நாடு அரசு எதிர்கொள்ளும் வருவாய் பற்றாக் குறையை நிவர்த்தி செய்ய ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? மற்றும் தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களிலும் சமமான வளர்ச்சியை உறுதி செய்வதற்காக அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**5. ஒடுக்கப்பட்ட / பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி தமிழ்நாட்டிற்கு பலன் அளிக்கிறதா ஒன்றிய அரசின் திட்டங்கள்?**

**சி.என். அண்ணாதுரை மற்றும் க. செல்வம் கேள்வி!**





தமிழ்நாட்டில் PM-DAKSH திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட சுயதொழில் முனைவோருக்கான திறன் மேம்பாடு பயிற்சி குறித்த விவரங்கள் கேட்டு திமுக மக்களவை உறுப்பினர்கள் சி. என். அண்ணாதுரை மற்றும் ஜி. செல்வம் கேள்வி எழுப்பியுள்ளனர். அதன் விவரங்கள் பின்வருமாறு:

தமிழ்நாட்டில் இத்திட்டத்தை செயல்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பயிற்சி நிறுவனங்களின் விவரங்கள் மற்றும் வழங்கப்படும் படிப்புகளின் விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் குறிப்பாக கிராமப்புற அல்லது பின்தங்கிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் இளைஞர்களை சென்றடைவதில் உள்ள சவால்கள் என்ன? அவற்றை சமாளிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாட்டில் பயிற்சிக்குப் பிந்தைய வேலைவாய்ப்புகளை உறுதி செய்வதற்கும் தொழில்முனைவோருக்கான நிதி உதவியை உறுதி செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்ன?

தமிழ்நாட்டில் டிஜிட்டல் கல்வியறிவு, மின் வணிகம், பசுமை வேலைகள் மற்றும் சுகாதாரம் போன்ற வளர்ந்து வரும் துறைகளில் PM-DAKSH திட்டத்தை விரிவுபடுத்த அரசிடம் உள்ள திட்டங்கள் என்ன?

**6. கிராம பஞ்சாயத்துகளை டிஜிட்டல் மயமாக்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவது எப்போது?**

**ஆரணி தரணிவேந்தன் கேள்வி**



கிராம பஞ்சாயத்துகளை டிஜிட்டல் மயக்காக்கும் எம்.எம்.பி திட்டத்தின்கீழ் பயன்பெறும் பஞ்சாயத்துகள் குறித்து ஆரணி தொகுதி திமுக மக்களவை உறுப்பினர் தரணிவேந்தன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? டிஜிட்டல் மயமாக்கல், உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ஊழியர்களின் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்படும் மொத்த நிதியின் அளவு எவ்வளவு?

பஞ்சாயத்து அளவிலான சான்றிதழ்கள் பெறுவது, ஒப்புதல்கள் பெறுவது மற்றும் பிற ஆன்லைன் சேவைகளை திறம்பட செயல்படுத்துவதை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? மற்றும் டிஜிட்டல் முறையில் தரவு பாதுகாப்பு மற்றும் தனியுரிமையை உறுதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**7. நாட்டில் தொடரும் பட்டியலினத்தவர் மீதான வன்முறைகள் மீது ஒன்றிய அரசின் தடுப்பு நடவடிக்கை என்ன?**

**ஆ. இராசா எம்.பி.**



நாட்டில் தொடரும் பட்டியலினத்தவர்கள் மீதான வன்முறைகள் குறித்து திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த முன்றாண்டுகளில் மொத்தம் பதிவான வன்முறை வழக்குகளின் எண்ணிக்கை என்ன? இதுவரை பாதிக்கப்பட்டவர்களுக்காக வழங்கப்பட்ட இழப்பீடுகளின் விவரங்கள் என்ன? வன்முறையால் பாதிக்கப்பட்ட பட்டியினத்தவர்களுக்கு ஒன்றிய மற்றும் மாநில அரசு வழங்கிய சட்ட உதவிகள் என்ன? கடந்த மூன்றாண்டுகளில் பட்டியலின மக்களுக்கு வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு நடத்தியுள்ள முகாம்களின் விவரங்கள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**8. தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களில் ஏற்றுமதிகளை ஊக்குவிக்க நடவடிக்கை என்ன?**

**வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!**



சென்னை - பெங்களூரு தொழில் வளாக திட்டத்தின்கீழ் வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் உறுதிசெய்யப்பட்ட சாலைகள் மற்றும் சரக்கு போக்குவரத்து உட்கட்டமைப்பின் தற்போதைய நிலை என்ன என்று வேலூர் மக்களவை திமுக உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார். திட்டத்தின்கீழ் பல்வேறு ஒப்புதல்கள் நிலுவையில் உள்ளதற்கு காரணம் நிதி பற்றாக்குறை மற்றும் செயல்திட்டத்தில் உள்ள தடைகளா என்று கேட்டிருக்கும் அவர், மேற்கு தமிழ்நாட்டில் தொழித்துறை மேம்படுத்தவும் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கவும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் மேலே குறிப்பிட்ட திட்டங்களை விரைந்து செயல்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை கரூரில் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்து, வீடுகளுக்கு நேரில் சென்று முதியோர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், ஆணையர் சுதா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அருகில் உள்ளனர்.